சொல்லாவிட்டாலும், மறுபரிசீலனை செய்வதே நமக்கு ஐயத்தையும் அச்சத்தையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் மத்திய அரசாங்கத்தினால் 5 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, குடி தண்ணீர், சாலை வசதி மற்ற வசதிகளுக்காக மாநில அரசு ஒரு கோடி ரூபாய் செலவழித்து, இப்படி 6 கோடி ரூபாய் போடப்பட்ட பிறகு, மறுபரிசீலனை என்றால், உள்ளபடியே மனக் குழப்பம் ஒரு மாநில அரசுக்கு வருவதில் வியப்பு இருக்க முடியாது. அந்தக் கலக்கத்தின் காரணமாகத்தான், வருமோ வராதோ என்ற ஐயப்பாடும் அச்சமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 22 அல்லது 24 கோடி ரூபாய். அந்த மொத்த மதிப்பீட்டில், முதல் தவணையாக 1963–64-ம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசினால் ஒரு கோடி ரூபாய் தரப்பட்டது. 1964-65-ம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாயும், 1965–66-ம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கும் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய்தான் தர முடியும் என்ற அளவில் பேசப்படும்போது— 24 கோடி ரூபாய் எங்கே! இரண்டு கோடி இரண்டு கோடி அளவுக்குத் தரப்பட்ட நிலை எங்கே! இப்போது அது சுருங்கி 50 லட்சம் ரூபாய்தான் தர முடியும் என்று சொல்லும்போது— அதுவும் 90 லட்சம் தருவதாகச் சொல்லி, 50 லட்சம் ரூபாய்தான் தர முடியும் என்ற நிலை வந்தால், இதைப் பற்றி பயம் ஏற்படுவதில் வியப்பில்லை. அந்த அளவில்தான் தூத்துக்குடி கைவிட்டுவிடப் படக் கூடாது. தமிழகம் ஏமாற்றத்திற்கு ஆளாகக் கூடாது என்று இன்றைய தினம் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். இன்னும் நம்பிக்கையோடு இருக்கிறோம். இன்றைக்கும் மத்திய அரசு தூத்துக்குடி துறைமுகத்திற்கு அமைமதி வழங்கி, அதை ஆழ்கடல் துறைமுகமாக அக்கச் சம்மதம் இருக்கிறது என்பதன் அறிகுறியாக, சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தொகையை வழங்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இந்த அளவில் இந்த மானியங்களின்மீது காலையிலிருந்து அருமையான கருத்துக்களை வழங்கிய எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொண்டு, தமிழகம் நீர்வளம், நிலவளம் பெறுவதற்கு 30 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைய தினம் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை, வெட்டுக்கள் இல்லாமல், தட்டு ஏதுமின்றி நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் நன்றி கூறி, இந்தத் துறைச் செயலாளருக்கும், பொறியாளருக்கும் நன்றியைக் கூறி, இங்குத் துறைத் தொழிலாளர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனத் துறையைப்பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் அதன் தொடர்புடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் இரவு 7-00